செ.வெ.எண்: 39 நாள்: 20:11:2017

ந.க.எச்5/25798/2017

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நீலகிரி மாவட்டம்,
நாள்: .11.2017.

## பத்திரிக்கைச் செய்தி

### அண்ணல் அம்பேத்கார் விருது பெற தகுதி வாய்ந்தோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக பலர் அரிய தொண்டாற்றி வருகிறார்கள். ஆதிதிராவிடர்களின் முன்னேற்றத்திற்காக தங்களை இணைத்துக் கொண்டு அவர்கள் ஆற்றிவரும் அரிய தொண்டுகளை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு ஆண்டுதோறும் அண்ணல் அம்பேத்கார் விருது வழங்கி தமிழ்நாடு அரசு சிறப்பித்து வருகிறது.

அவ்வகையில் 2017ஆம் ஆண்டிற்கான அண்ணல் அம்பேத்கார் விருது ஜனவரி மாதம் 2018 பெற விரும்புவோர் தங்களை பற்றி முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கலாம் என்றும், அதற்கான விண்ணப்ப படிவத்தினை **www.tn.gov.in/ta/forms/Deptname/** என்ற இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்தோ அல்லது நீலகிரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்திலோ பெற்றுக் கொள்ளலாம் என்றும், அவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை நவம்பர் மாத இறுதிக்குள் சமர்ப்பித்திடவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

ஒம்/XXXX
மாவட்ட ஆட்சித்தலைவர்,
நீலகிரி மாவட்டம்.

பெறுநர்
மக்கள் தொடர்பு அலுவலர்,
நீலகிரி மாவட்டம்.

/உ.ந.உ.ப./

மாவட்ட ஆட்சியருக்காக